News and Articles in Tamil and English Please send them to:

THE EDITOR,

'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q / J / 104 / News / 89

*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*

**Vol:- 152 Jaffna, Friday 27 December 1991 No: 21**

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription

Island : Rs. 100/-

*For Advertisements*

Apply to:
THE MANAGER
'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai

## J. D., C. S. I. Youth Programme
## A. C. M. 175th Anniversary Celebration

The Diocesan youth held a one day camp at the Uduvil Girls' College on Saturday the 7th of September as part of the 175th Anniversary Celebrations of the American Ceylon Mission. There were 416 youth from different Churches who participated.

The programme began with worship in the Uduvil Church at which the Rev. D. R. Ambalavanar preached the sermon on "The Mission of the Pioneer American Missionaries to Jaffna'.

After a fellowship Tea at 10.00 a. m., a Conference followed at 10. 30 a. m. at the Girls' College Hall presided by the Rev. T. S. Premarajah. The Chief Speaker was Mr. A. Kadirgamar, Principal Emeritus of Jaffna College and at present the Registrar of the Seminary. Mr. Kadirgamar portrayed before the youth many incidents and memorable events from the lives of the early missionaries bringing out the Spirit in which those missionaries dedicated their lives to serve our community. The Conference was followed by a Quiz Competition in which nine churches partipated. It was encouraging to note that the youth had taken trouble to study the history of the Mission with great care and much enthusiasm. The youth of the Vaddukoddai Church won the first place and Araly Church runners up.

After lunch the youth divided themselves into six groups preparing a skit depicting scenes from the Mission History. The days programme ended with fellowship Tea and the closing worship.

## Children's Rallies – J. D., C. S. I

A special feature of the Children's Programme during the 175th Anniversary year of the Mission was the fact that the Rallies were held in four different areas to ensure maximum participation, Manipay, Uduvil, Chavakachcheri and Vaddukoddai. These were held during Children's Week in July on Saturday the 20th of July. There were Singing Competitions including the Singing of lyrics composed for the occasion by each of the Church Children's Groups. These proved to be of good quality.

The Rallies also included worship, dances, quiz competitions and games.

## Jaffna College Felicitates Jubilarians

The frequent news in recent times in Jaffna is about people leaving the country as expatriates to settle abroad. In this context it is refreshing to be able to felicitate the long and devoted services of those who have decided to stay on and continue to serve in our institutions.

Jaffna College has been singularly fortunate in the long standing traditions of staff members staying on till the time of their retirement. The College on Monday the 14th of October at 3.30 p. m. felicitated twenty - five years of service rendered by four of its staff members :

1. Miss S P. Gulasigam
2. Mrs. S. Kesavarajan
3. Miss S. D. Sittampalam
4. Mrs. N. Balasingam

The Praise Service at the Cathedral Church, Vaddukoddai was led by a member of the staff Mr G. Rajanayagam. Mr. Noel A. Vimalendran of the staff and Mas. S. P Gunaseelan, the President of the School Council read the lessons. The Rev. G. D. Anandarajan, Pastor of the Vaddukoddai Church preached the sermon. The Principal, the Rev. Dr. S. Jebanesan presented each of the jubilarians a copy of the Bible. A fellowship tea followed at Ottley Hall, where a large number of alumni, parents and well - wishers joined the staff.

### Wedding

A pretty wedding took place at the St. John's Church, Chundikuli on Monday, 9th September 1991 in the morning when Mr. Robin Y. Thambyrajah led to the altar Karmalita Kamalini Rajaratnam. The bride is the daughter of Mr. and Mrs. Thuraiappah Rajaratnam of Chundikuli and Robin is the son of the late Mr. Jemes Christadas Thambyrajah and Mrs. Ranee Thambyrajah of Vaddukoddai. The Rev S. P. Nesakumar conducted the service while the Rev. P. R Navendranugoolan, a brother-in-law of the bridegroom solemnised the marriage. The Rev. G. D. Anandarajan preached the homily.

## Diocesan Women's Fellowship

The Women's Fellowship of the J D., C. S. I. held to Annual Get Together on Saturday the 26th of October 1991 at the Manipay Church The service in the morning was led by the Manipay Church Women's Fellowship President Mrs Indrani Jeyakumaran and the preacher at the service was Mrs Thaya Thiagarajah. Mrs. Thiagarajah in her sermon emphasised how women are now called upon to make their contribution not just in assisting the men but by playing their full and meaningful role as women. She said women should therefore learn to study the Bible from a woman's perspective and also learn to think and act from a woman's perspective. In this way the Church and the community will be truly enriched.

An important aspect of the day's programme was a debate in which two women and a man on each side carried out a very spirited and lively debate on whether women themselves were responsible for their state of being oppressed in the community. Mrs. K. Bavasingam, Mrs. A. R. Tampiyappa, Miss Esther Chelliah and Mrs. A. N. L. Virasippillai along with the Revds. D. S. Thiagarajah and Christo Roberts participated in the debate. This debate was followed by a cultural programme where it was a delight to watch some of the senior members of the Women's Fellowship of the Churches taking part in skits and dances. The day's function came to a close with fellowship lunch at the Dining Hall of the Arulmanai Boy's Home.

## A. C. Canagarajah

We regret to record the death of Mr. A. C. Canagarajah on 28 - 10 - 1991 in Colombo. He was an eminent Engineer in Jaffna and was formerly on the staff of Walker & Sons Limited, Colombo. During the years he was in Jaffna, he gave of his time and expertise for many a worthy cause. He was much in demand by Churches institutions and other social organisations for planning, supervising and constructing buildings. The buildings which he helped to construct would be innumerable to list. At Jaffna College, St. John's College, Chundikuli Girls' College, Uduvil Girls' College, Nuffield School and at many other institutions, there are prominent buildings which would remind one of his services. He was the Manager of the Nuffield School and was also closely associated with the administration of St. John's College and Chundikuli Girls' College. He was one of the eminent Engineers who helped in the establishment and running of the Jaffna College institute of Technology. He served on its Council and was its Chairman for many years. He also served as a member of the Jaffna College Board of Directors and was its Chairman and Vice — Chairman for some years. He was a close fried of the Ashram and helped in constructing buildings both at the Ashram and at the Christian Theological Seminary, Chunnakam.

In the midst of his very busy professional career, he never forgot his spiritual obligation and was an active layman in his own mother Church at Kopay and also at Inuvil and Uduvil where he resided with his wife for the last so many years. His wife Dr. Joy Canagarajah is on the staff of McLeod Hospital and now its Medical Superintendent.

Mr. Canagarajah died in Colombo and the funeral took place there. A memorial service was held in his mother Church at Kopay on Monday the 4th November at 3 . 30 p. m. The service was conducted by the Rev. E. J. Jebaratnam assisted by the Rev. Isac Selvaratnam. Mr. S. P. Jeevananthan paid a tribute and the Rev. Sam Alfred preached the sermon. The Rt. Rev. D. J. Ambalavanar gave the blessing.

Mr. Canagarajah leaves behind besides his wife Joy, two sons Chandran and Arunan. He is a son of the late Mr. & Mrs. S. V. Chinnappah of Kopay and a son - in - law of the late Mr. D. R. Gunasegaram and Mrs. Lily Gunasegaram of Vaddukoddai.

### The Rev. N. Kathiravelu

The Rev. N. Kathiravelu, a Worker for many years in the Jaffna Diocese of the C. S. I. passed away on Saturday the 16th of November at the home of his son at Chundikuli. Mr. Kathiravelu was 86 years old

(Continued on 4th Page)

The Management of the Morning Star together with the American Ceylon Mission press wishes our readers.

**A Merry Christmas and a HAPPY NEW YEAR 1992**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயதாரகை

Estd. 1841

மலர் 152 27 - 12 - 1991 இதழ் 21


பிரசங்கி 3 : 12

" மகிழ்ச்சியாயிருப்பதும் உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல் வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லை என்று அறிந்தேன் ".

இன்று நடப்பு ஆண்டின் கடைசி நாள் ஒரு வருடத்தில் இறுதி எல்லையில் நாம் நிற்கும் போது அதாவது 1991 ஆம் ஆண்டின் இறுதி எல்லையில் நிற்கும்போது அந்த ஆண்டிலே கண்ட பலவித கஸ்டங்களும், துன்பங்களும், துயரங்களும் நம் மனதிலே காட்சியளிப்பது இயல்பு. ஏன் என்றால் இனிவரப் போகும் 1992 ஆம் ஆண்டு அறியப்படாத ஒரு ஆண்டு. இந்த ஆண்டிற்குள்ளே ஒருவனும் ஒருபோதும் சென்றதே இல்லை. எனவே அந்த ஆண்டைக் குறித்து எம் மனதிலே ஒரு அச்சம், பயம், திகில் எழுந்து கொண்டே இருக்கிறது.

கிரேக்க தத்துவஞானி பிளேட்டோவைப் பற்றி நாம் அனைவரும் அறிவோம். அந்த ஞானி, நான் மூன்று காரியங்களுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்த விரும்புவதாக சொன்னார்.

1 நான் மனிதனாகப் பிறந்ததற்காக
2. நான் கிரேக்க தேசத்தில் வாழ்வதற்காக
3. நான் தத்துவ ஞானியாக இருப்பதற்காக

பிளேட்டோ மூன்றுவிதமான காரியங்களுக்காக நன்றி செலுத்த விரும்பினார். ஆனால் நாம் இன்று எவற்றிற்கு நன்றி செலுத்த வேண்டும்.

1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தைச் சற்று திரும்பி பார்த்தோம் என்றால், அழிவுகள் வேதனைகள் அகன்று அமைதியின் நாட்களாக காட்சியளித்தது நாம் மகிழ்ச்சியடைந்தோம். இறைவனுக்கு நன்றி செலுத்தினோம்.

ஆனால் சில மாதங்களின் பின், தமிழ்ப்பகுதிகளிலே போர் தொடங்கியது. மீண்டும் பயங்கர இருள். மகிழ்ச்சி ராகங்கள் பாடிய மக்களின் இதயங்களில் சோகராகங்கள் பாடியது. எங்கும் துப்பாக்கி வேட்டுக்களின் — சத்தம் – கொலை, கொள்ளை எங்கும் ஒரே அகதி முகாம், இலங்கையிலே பிறந்து இந்த மண்ணில் வாழ முடியாத தமிழ் மக்கள் சொந்த மண்ணை விட்டு அந்நிய மண்ணிலே வாழ்வதற்கு ஓடிச் சென்றார்கள். அங்கும் நிம்மதியாக வாழ்கிறார்களா?

90 ஆம் ஆண்டு தொடங்கிய, ஆரம்பித்த இந்த நிலமை இன்று வரை தொடர்ந்து கொண்டேதான் வருகிறது.

இவ்வகையான காலக் கட்டத்திலேயும், துன்பத்தின் மத்தியிலேயும் இறைவன் நம்மை அற்புதமாக பாதுகாத்து வந்தார் அல்லவா? நாங்கள் நினைக்க கூடாது நாங்கள் நல்லவர்கள் என்றபடியினால் தான், காத்து வந்தார், வருகிறார் என்று இல்லை. இறைவன் நல்லவர். அவர் நம்முடைய திட்டத்தை இப்பகுதியில் நிறைவேற்றுவதற்காகவே எங்களை பாதுகாத்து வருகிறார். ஆகவே நாம் அனைவரும் நன்றி நிறைந்த உள்ளத்தோடு அவரை நோக்கி அவருடைய அற்புதமான ஆச்சரியமான வழி நடத்துதலை எண்ணிப் பார்ப்போம்.

பிளேட்டோ மூன்று விதமான காரியங்களுக்காக நன்றி செலுத்த விரும்பினார் நாம் இன்று இரண்டு விடையத்திற்கு நன்றி செலுத்தப் போகிறோம்.

1. அறியப்படாத ஒரு ஆண்டை அறியப்போவதற்காக
2. இறைவன் சகல நாட்களிலும் நம்மோடு கூட இருப்பார் என்ற நிச்சயத்திற்காக

இந்த இருள் சூழ்ந்த நாட்களிலே நன்றி என்ற அந்த மூன்று எழுத்தை மாத்திரம் செலுத்தினல் போதாது இப்பயங்கர சூழ்நிலையில் மக்களின் நலனுக்காக நாம் செய்ய வேண்டிய பணி என்ற இரண்டு எழுத்து என்னவென்பதை, இறைவனிடம் இருந்து அறிய முன்வரவேண்டும்.

பிரசங்கியின் பல வசனங்களைப் பார்க்கும்போது ( 3 : 12, 13, 23 5 : 18, 20 ) அன்றாடம் வாழ்க்கையில் எழுகின்ற வாய்ப்புக்களைப் பயன்படுத்தி வசதிகளைப் பெருக்கிக் கொண்டு இன்பதை அனுபவிக்க வேண்டும் என்பது கடமையுணர்வற்ற சுயநலத்தைக் காட்டவில்லை. எதிர்காலமானது ஒவ்வொரு தனிமனிதனின் கைகளில் தான் இருக்கிறது என்ற உண்மையையே பிரசங்கி விளக்கி கூறுகின்றார். என்னதான் மனிதன் நடப்பித்தாலும் இறைவனே வாழ்க்கையின் பொருளாக இருக்கிறார் என்பதை தெளிவாகவும் விளக்குகிறார.

எம்முடைய வாழ்க்கையிலே இன்னும் ஒரு புதிய ஆண்டைக் காணப் போகிறோம். பல விதமான திட்டங்களைப் - போட்டு இருக்கலாம் எண்ணி இருக்கலாம். வரப்போகும் ஆண்டிலே செய்து முடிக்க வேண்டும் என்று ஆனால் பிரசங்கி கூறுகிறார் கேளுங்கள்.

" மகிழ்ச்சியாயிருப்பதும் உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல் வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லை என்று அறிந்தேன் "

பிரசங்கியின் வார்த்தைக்கூடாக மூன்றுவிதமான விடயங்களை அறிந்து கொள்ளலாம்

1. மகிழ்ச்சியாய் இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்
2. நன்மை செய்தல்
3. இறைவனில் விசுவாசம் வைத்தல்.

## 1. மகிழ்ச்சியாய் இருக்க கற்றுக் கொள்ள வேண்டும்

எம்முடைய வாழ்க்கையானது காலையிலே மலர்ந்து மாலையிலே வாடும் பூவைப் போன்றது. எப்போது எம்முடைய வாழ்வு முடியும் என்று யாரும் கணக்கிட முடியாது இப்படியாக இருக்கும் இந்த வாழ்விலே நாம் இருக்கும் வரை சந்தோஷமாக இருக்க வேண்டும்.

எம்முடைய மகிழ்ச்சிக்குப் பலவிதமான தடைகள், பாரங்கள், துன்பங்கள், துயரங்கள் மனதை அமிழ்த்துகிறது. பாரங்கள் மனதை தாக்கும்போது சந்தோஷத்திற்கு இடம் ஏது.

ஒரு முனிவரும் சீடனும் சந்தோஷமாக கதைத்துக் கொண்டு தங்கள் இருப்பிடத்தை நோக்கி விரைந்து கொண்டு இருக்கும்போது ஒரு ஆற்றைக் கடக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாம். ஆற்றைக் கடக்க முற்படும்போது ஒரு அழகிய பெண் அந்த முனிவர் முன் ஓடி வந்து ஐயா நானும் அந்த ஆற்றைக் கடக்க வேண்டும். உடைகள் நனைந்தால் வீடு செல்ல முடியாது எனக்கு உதவி செய்யுங்கள் என்று கேட்டபோது. உடனே அந்த முனிவர் அந்தப் பெண்ணை தோளிலே சுமந்து சென்று அடுத்த கரையிலே விட்டாராம் சந்தோஷமாக கதைத்து வந்த சீடன் இப்போது ஆழ்ந்த கவலையுடனும் யோசனையுடனும் ஒன்றும் பேசாமல் வருவதைக் கண்ட முனிவன் சீடனே இப்போது நீ ஏன் கதைக்காமல் வருகிறாய்? உனது முகத்திலே சந்தோஷம் இல்லையே காரணம் என்ன என்று கேட்கும்போது. சீடன்சிறிது தாமதித்து விட்டு நீங்கள் அழகான பெண்ணைத் தோளிலே சுமந்து வந்தீர்கள், அதைப்பற்றி சிந்தித்து வருகிறேன் என்று கூறினானாம். உடனே முனிவன் நான் அந்தப் பெண்ணை அங்கேயே இறக்கி விட்டு வந்து விட்டேனே நீ இன்னுமா சுமந்து கொண்டு வருகிறாய்? என்றாராம்.

ஆம் நாமும் அந்த புத்தி இல்லாத சீடனைப்போல சில விடையங்களை பாரங்களை தள்ளிவிடாமல் சுமந்து கொண்டு எனக்குள்ளும் சந்தோஷம் இல்லாமல் அதனால் மற்றவனையும் சந்தோஷமாக வாழ விடாமல் இருக்கிறோம்.

வருடத்தின் இறுதி நாளில் இரண்டு விடயங்கள் எமது வாழ்க்கையில் நடைபெறப் போகிறது.

1 விடுதல் 2. முன்னேறுதல்

வீடுதல் எனும்போது நடப்பு ஆண்டை விடப்போகிறோம். ஐயோ 91 ஆம் ஆண்டில் எதை எல்லாம் செய்ய நினைத்தேன். நாட்கள் மறைந்து வருடமும் முடியப் போகிறதே என்று நடந்தவைகளை எண்ணி கவலைப்பட்டால் பிரயோசனம் இல்லை. கவலை எனும் பாரத்தை இறக்கி வைத்து விட்டு புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்க, முன்னேற எம்முடைய கால்களை மெதுவாக தூக்கி வைக்க வேண்டும்.

கவலையை மாத்திரம் விட்டால் போதாது எம்முடைய அன்றாடப் பாவங்களில் இருந்தும் விடுபட வேண்டும்.

" ஆகையால் மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்து கொண்டு இருக்க பாரமானயாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு விசுவாசத்தை துவக்கிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக் கடவோம்.

( எபிரேயர் 12 : 1 )

ஒரு ஓட்டப் பந்தயத்தில் ஒரு வீரன் ஓடும் போது பாரமான நீண்ட அங்கிகளை அணிந்து ஓடமாட்டான். அப்படி ஓடினால் அவனுக்கு வெற்றி கிடைக்கமாட்டாது ஆகையால் பாரமில்லாத உடையை அணிந்து பாரமான பொருட்களை தூக்கி எறிந்துவிடுவான்.

நாமும் இன்னும் ஒரு வருடத்தை நோக்கி ஓடப் போகிறோம், அதுவும் ஒரு பந்தயம் போன்றதுதான் புதுவருடத்தை காணப் போகிறேன் அந்த வருடத்திலாவது நான் நினைத்ததைப் பெற்றுக் கொள்ள முடியுமா? முடியாதா? என்ற சந்தேகம் மனதிலே எழக்கூடும். உன்னிடம் உள்ளவைகளுக்காக இன்று நீ நன்றி செலுத்து இல்லாதவைகளுக்காகவும் நன்றி செலுத்து ஏன் எனில் இப்போது உன்னிடம் உள்ளவைகள் முன்னம் இல்லாதவை. இல்லாதவைகள் நீ நினைக்கும் முன்னதாக வரும் திகையாதே நீ நினைக்கும் அந்தப் பந்தயப் பொருளுக்கான இலக்கை நோக்கி பாரமான கவலை, பாசம், ஆசை, பொறாமை, கோபம் போன்ற பாவங்களை விட்டு சந்தோஷத்துடன் ஓடுவோம் வெற்றிக் கம்பம் எமக்கே.

## 2 நன்மை செய்தல்

இந்த நாட்களில் உலகம் தரும் சந்தோஷத்திற்காக ஏங்கி தவிக்கக் கூடாது உலகம் தரும் சந்தோஷம் நிலையற்றது. ஆனால் இறைவன் மூலம் எமக்கு வரும் சந்தோஷமே நிலையானது, நிறைவானது.

இவ்விதமான சந்தோசத்தை ஏன் இறைவன் தருகிறார்? அதன்மூலம் நாம் நன்மை செய்ய பணி செய்யவே.

இந்த சந்தோஷம் நிறைவு பெற வேண்டும் என்றால் பணி செய்ய வேண்டும்.

கிணறு ஒன்றை எடுத்துப் பாருங்கள் அந்தக் கிணறு இறைக்கும் போதுதான் ஊற்று அதிகரிக்கும். அதே வண்ணம் இறைவன் தந்த சந்தோஷத்தை பயன் படுத்த வேண்டும்.

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பாருங்கள் அவர் சுற்றித் திரிந்து நன்மை செய்தார். அவர் எமக்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்டினார். அவருடைய வாழ்வை பின் பற்றும் நாம் நன்மை செய்ய வேண்டாமா? ஆதி கிறிஸ்தவர்களின் வாழ்க்கை எப்படி இருந்தது? ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக தங்களுக்குள்ளதை பங்கிற்று கொடுத்து அல்லவா வாழ்ந்தார்கள். இவர்களின் வாழ்க்கையைக் கண்ட புற இனத்தினர் இவர்களை பின்பற்றி கிறிஸ்துவின் அன்பைப் பெற்றார்கள் அல்லவா.

நடப்பு ஆண்டு இனி வரப்போகும் ஆண்டிற்கு ஒரு வழிகாட்டியாக அமைய வேண்டும்.

இந்த இருள் சூழ்ந்த காலத்தை எடுத்துப் பாருங்கள். எத்தனை பேர் இருளில் இருக்கிறார்கள். இவர்களுக்கு நான் என்ன செய்ய முடியும் என்ற கேள்வி எழவேண்டும்.

ஒரு சிறிய மெழுகுதிரியை ஏற்றி வைத்தவுடன் அது அந்த இடத்தையே ஒளியால் நிரப்புகிறது அல்லவா? அதேபோல் சின்னஞ் சிறிய மெழுகு திரிகளாக, இருந்து இருளில் வாழும் மக்களுக்கு ஒளி கொடுக்க வேண்டும்.

3ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தாரகை ஒளி

தக்க இடத்துடன் பெருந்த தொழில் செய்யும் அரசர்
வேறு துணையில்லாமல் செய் வெற்றி கொள்வார்.

## எங்கள் கருத்து

## நம்பிக்கையில் மகிழ்ச்சியோடிருங்கள்!

இறைவனின் திருவருளால், மீண்டும் ஒரு புதிய ஆண்டிற்குள் புகும் வாய்ப்பைப் பெற்றுள்ளோம். இதற்காக நன்றிதோய்ந்த உள்ளத்தோடு, எல்லாம் வல்ல இறைவனைப் போற்றித் துதிப்போமாக.

கடந்த ஆண்டில் நாமடைந்த கஷ்டங்கள், அனுபவித்த துன்பங்கள், பட்ட வேதனைகள் பல. ஆயினும் இவற்றினூடாக இறைவன் எங்களைப் பாதுகாத்து வழி நடத்தி வந்திருக்கிறார். நாங்கள் நல்லவர்கள், பாவமற்றவர்கள் என்பதினால் அல்ல நாங்கள் தொடர்ந்து எம் பெருமானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றித் துன்புறும் மக்கள் நடுவில், அவருடன் சேர்ந்து துயர்துடைக்கும் பணியில் ஈடுபடவேண்டுமென்பதற்காகவே.

போர் இன்னும் ஓயவில்லை. தமிழ் மக்கள் துயரக்கடலில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் பதகளிப்பைக் கண்டும் காணாதவர் போலிராமல், நம்பிக்கையோடு முன்வந்து, உதவிக் கரங்கொடுக்கவே, இறைவன் நம்மை அழைத்துள்ளார். எதிர்வரும் புதிய ஆண்டிலும் தமிழ் மக்களைச் சூழ்ந்துள்ள காரிருள் மேகம் அகலாது போல் தோன்றினாலும், தளர்ந்து போகாமல், கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை என்ற துணிவுடன், நம்பிக்கையோடு தொடர்ந்து செயலாற்ற வாருங்கள்,

மகா அலெக்சாந்தர், கிழ்நாடுகளில் போரிட்டுக் கொண்டிருந்த வேளை — தன் நண்பர்களை அழைத்துப் பலவிதமான கொடைகளை வழங்கிக் கொண்டிருந்தான் - தாராள மனத்துடன் தனக்குள்ள யாவற்றையும் வழங்கிக் கொண்டிருந்தான். அவ்வேளையில், அவன் நண்பரில் ஒருவர், அவனைப் பார்த்து “ ஐயா உமக்குள்ள பொருட்களனைத்தையும் வழங்குகிறீரே, உமக்கு மிச்சம் இராதே! ” என்றான். அதற்கு அலெக்சாந்தர் “ அப்படியல்ல — எனக்கென ஒன்றுண்டு, அதுதான் “ நம்பிக்கை ” - என்றான். யானைக்கு எவ்வாறு தும்பிக்கை துணையாக உளதோ, அவ்வாறே நம்பிக்கை நமக்குத் துணையாய் நிற்கும்.

இந்த நம்பிக்கை நமக்களிப்பவர் பரிசுத்த ஆவியரே. அவரே நம்மை இயேசுபெருமானுடன் இணைத்து, எத்தகைய சூழ்நிலையிலும் அஞ்சாமல் அயராது பணி செய்ய வழி நடத்துவார். இறைவன் இந்நாட்களில் பேசாமல், செயலாற்றாமல் இருக்கிறார் என்பதல்ல அவர் நம் மேல் இரக்கம் கொண்டுள்ள ஆண்டவர். மலைகள் நிலைபெயரலாம், குன்றுகள் அசைந்து போகலாம், ஆனால் நம்மீது அவர் கொண்ட அன்பு நிலை பெயராமலும், அவர் சமாதானத்தின் உடன்படிக்கை அசையாமலுமிருக்கும் ’ என்பது உறுதி.

இப்புதிய ஆண்டிலும் இன்னும் பல துன்பங்கள், வேதனைகள் நம்மைப் பாதித்தாலும், பதறாமல் கலங்காமல் நம்பிக்கையோடு கிறிஸ்து பெருமானுடன் சேர்ந்து எளியோர், வறியோர், துன்புற்றோர் ஆகிய இவர்கள் நடுவில் நம்பிக்கையோடு பணிசெய்வோம் வாருங்கள். ‘ அவருடைய நாள் வரும்போது, இத்துன்ப இருளை அகற்றும் உதயசூரியன் உதிப்பார் என்பது உறுதி.

“ நம்பிக்கையில் மகிழ்ச்சியோடிருங்கள்
வேதனையில் மனஉறுதியோடிருங்கள்
செபத்தில் நிலையாயிருங்கள் ( 12 : 12)

2ம் பக்கத் தொடர்ச்சி

ஆண்டவரில் பெற்ற அந்த சந்தோஷத்தை சுயநல நோக்கம் கருதாமல் மற்றவருக்குப் பணி செய்வோம். இதையே இறைவன் நம்மில் எதிர் பார்க்கிறார்.

3. விசுவாசம்

சந்தோஷமாக இருக்க வேண்டும் நன்மை செய்ய வேண்டும் என்ற நினைவு எண்ணம் நிலைத்திருக்க வேண்டும். என்றால் இறை விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும்

இந்த வருடம் இருள் சூழ்ந்த வருடமாக இருந்தது. இனிவரப் போகும் வருடம் எப்படி இருக்குமோ என்று ஏங்கித்தவிப்போமாகில் அங்கே இறைவிசுவாசம் இல்லை என்றேதான் கூறவேண்டும்.

எம்முடைய எதிர் பார்ப்பு எல்லாம், ஒரு நல்ல சமாதானம் கிடைக்க வேண்டும். சந்தோஷமாக வாழ்வை மேற்கொள்ளவேண்டும் என்பதே முதலில் எம்முடைய உள்ளங்களில் இருந்து சமாதானம் பிறக்க வேண்டும். இதற்கு மன்னிப்பு அன்பு ஆகியவை மிக மிக அவசியம்.

பணத்தால் அதை வாங்க முடியாது, புத்தியினால் அதைச் சம்பாதிக்க முடியாது, ஞானத்தால் அதை அடைய முடியாது, இறைவனின் கிருபை மூலமே அதைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இறைவனை நோக்கி விசுவாசத்துடன் மன்றாடும் போது அங்கே மனந்திரும்புதல் இடம் பெறுகிறது மனந்திருப்புதல் நடைபெறும போது அங்கே பழைய ஆதாமில் மரித்து புதிய ஆதாமில் உயிரப்பிக்கப்படுகிறோம். அதாவது பழைய மனித நிலையில் இருந்து விடுபட்டு புதிய மனிதனாக காட்சியளிக்கின்றோம. புதிய மனிதனாக மாற்றம் அடையும்போது ஒரு புதிய சிந்தை உருவாகிறது. அந்த சிந்தையே இறை சிந்தை, இறைவிசுவாசம்.

புதிய ஆண்டு எப்படி இருக்குமோ என்று ஏங்கி தவிக்கும். ஒவ்வொரு மனிதனும் இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்க்க வேண்டும்.

கடவுள் நமது பிரிய குமாரனை தந்ததற்காக நன்றி செலுத்த வேண்டும். முழு விசுவாசத்தோடு அவரண்டை சென்றால் வரும் ஆண்டில் பல்வேறுபட்ட ஆசீர்வாதங்கள் எமக்கு கிடைக்கும்.

ஆகவே அன்பானவர்களே கடந்த நாட்களின் மாதங்களின் வேதனைகளை எண்ணிக்கலங்காமல், கடந்த கால சம்பவங்கள் நமக்கு தைரியம் தருவனவாய் இருக்கவேண்டும்.

இஸ்ரவேலர் நம்பிக்கையற்றவராய் தம்மை அழைத்த கடவுளை விட்டு புறத்தியார் கையிலே சிக்குண்டார்கள். இருந்தும் கர்த்தர் தாமே அவர்களை மீட்டுக் கொண்டார்.
( ஏசாயா 43 : 1

கடந்து போகும் இவ்வாண்டில் நாம் கண்ட பாடுகளை அல்ல நாம் அவைகளின் பெற்ற ஆறுதலை மீட்பை, பாரமரிப்பை சிந்திப்போமாக. அப்போது வரும் ஆண்டிலும் நாம் பெறக்கூடிய பாதுகாப்பையும் பராமரிப்பையும் குறித்து இறைவனில் விசுவாசமாயிருப்போம். காந்தவர் காப்பார் இன்றும் இன்மேலும் காத்திடுவார் கலங்காதே மனமே என்று கூறி முன் செல்வோம்.

நன்றி நிறைந்த உள்ளத்தோடு நம்பிக்கையுடன் புதிய ஆண்டிற்குள் நுழைவோம் வாருங்கள்.

“ திகையாதே கலங்காதே, உன் கடவுளாகிய கர்த்தர் உன் கூடவே இருக்கிறார் என்றியம்பிய எங்கள் பெருமான் அடுத்த ஆண்டில் நடாத்த வேண்டிய பணிகளை காட்டுவார்.

நாம கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கிறோம் உண்மை அறிவு பெற்றிருக்கிறோம். நன்மை தீமையைப் பகுத்துணர்ந்து ஆவியானவரின் துணை கொண்டு புத்தாண்டைத் துவக்குவோம். ஆவியானவரால் பிறந்த இயேசு இப்புத்தாண்டை ஆவியானவரின் கொடைகளால் நிரப்பி நாம் ஆவியானவரின் வாழ்வான அன்பு வாழ்வை வாழ உதவுவாராக. பழையன கழிதலும் புதியன புகுதலும் கால அமைதியினால.

### ஒளி விழா

மாங்குளத்தில அமைந்துள்ள தென் இந்திய திருச்சபை அங்குள்ள இதர கிறிஸ்தவ சபையுடன் இணைந்து 2 - 12 - 91 காலை 9 - 00 மணிக்கு முதல் முறையாக ஒளி விழாவை மாங்குளம் ம. வி. நடாத்தனார்கள் இந்நிகழ்ச்சிக்கு ஆரம்பமாக கத்தோலிக்க திருச்சபை வண பிதா R. சூசைதாசனும் வண T. தேவநேசனும், கல்லூரி அதிபர் திரு S. சண்முகரட்ணமும இணைந்து மங்கள விளக்கேற்றி அருள் திரு. T. தேவநேசனின் இறை வேண்டலுடன் விழா இனிதே ஆரம்பமானது. இதில் பாடசாலை கிறிஸ்தவ மாணவர்களது நடனம், நாட்டியம், நாடகம், கிறிஸ்து பிறப்பு பாடல்கள், தாலாலயம் ஆகியன இடம் பெற்றன. வண பிதா R. சூசைதாசனும், வண. பிதா T. தேவநேசனும் இறை ஆசி வழங்கினர். அத்தருணத்தில் கல்லூரி அதிபர் பங்கு பற்றி சிறப்புரை வழங்கிய போது இந்நிகழ்ச்சி மாங்குள பகுதி பாடசாலையில் முதல் முறையாக நடாத்தப்படுவதாகவும், இது கல்லூரி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்று கல்லூரி வரலாற்றில் இடம் பெறச் செய்த தென் இந்திய திருச்சபைக்கும், இதர கிறிஸ்தவ சபைக்கும் நன்றி தெரிவித்தார். இறுதியாக ஆசிரியர் குழுவிற்கும், மாணவர்கட்கும தேனீர் விருந்தளித்து வண. பிதா T. தேவநேசனின் ஆசீர்வாதத்துடன் இனிது நிறைவேறியது.

### கண்டுகொண்டேன்

அழகுக் குழந்தை யொன்று
என்னை
இறுகப் பற்றிக் கொண்டபோது-
பற்றுறுதி யாதென்பதை
யறிந்தேன் !
இருகண்ணும் இழந்தோன்
ஒருவன்
இன்முகம் காட்டியபோது —
நன்னம்பிக்கை யாதென்பதைக்
கண்டேன்
இன்னலுறும் கோலத்தில் ஒருவர்
ஈனச்சிலுவை யொன்றில்
தொங்குதலைக்கண்டு!-
அன்பு யாதென்பதை உணர்ந்து
கொண்டேன்.

— ( மூலம் : சந்திரன் தேவநேசன் )

### அழிவை நோக்கிச் செல்லும் சமயம்

மனித வாழ்வை அழிக்கின்ற குடிசைகளையும, நசுக்குகின்ற சமுதாய நிலையினையும். ஒடுக்குகின்ற பொருளாதார நிலையினையும் — பற்றிக் கவலைப்படாமல், மனிதனின் ஆன்மாவின் உயர்வைப்பற்றி மட்டும் கவலைப்படும் சமயம் அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறதெனலாம்.

— மார்ட்டின் லுதர்

### பொழுதுபோக்குப் பணிகள்

சிலர் பன்னாட்டு நாணயங்களை ( செல்லா நாணயங்களைச் ) சேர்க்கிறனர். இச்செல்லா நாணயங்கள் ஓர் வரலாற்று நூலைப் போன்றது. இவற்றின் மூலம் நம் முன்னோரின் சமயம் — பண்பாடு — கலாச்சாரம் — பொருளாதாரம் ஆகியவற்றை நாம் ஓரளவு அறிய முடிகிறது.

கி. மு. 680 ஆம் ஆண்டளவில் சின்னாசியாவில் உள்ள லிடியா நாட்டு வணிகர் ஒருவர்தான், நாம் பயன்படுத்தும் நாணயத்தின் தந்தை, ஆயினும், மேனாட்டில் நாணயத்தை முதன் முதலாக வெளியிட்ட பெருமை கி. மு. 8 ஆம நூற்றாண்டைச் சேர்ந்த லிடியா நாட்டு கிரீசஸ் என்னும் மன்னனுக்கே உரியது. இவ்வாறு செல்லாத நாணயங்களைச் சேர்ப்பது ஒரு சிறந்த பொழுது போக்காய் இருந்து வருகிறது.

பல ஆண்டுகளுக்கு முன் ஆபிரிக்கா நாட்டின் பூர்வீகக் குடிகளில் ஒரு சாரார் மக்களைக் கொன்று, அவர்தம் தலைகளைச் சேர்த்து இன்புற்று மகிழ்ந்தனர்.

உலகின் முதல் தபால் தலை ( முத்திரை ) 1840 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது. இதன் பெயர் ‘ பென்னி பிளாக் ! எனப்படும் இந்தியாவில் 1854 ஆம் ஆண்டு முதன் முதலாகத் தபால் முத்திரைகளை வெளியிட்டனர். 1862 ஆம் ஆண்டு தொடக்கம் முத்திரைகளைச் சேகரிப்பது பொழுது போக்குகளில் ஒன்றாய் அமைந்தது.

மிகச் சிறிய முத்திரையை வெளியிட்ட நாடு பொலிவியா ஆகும். அளவு 0 . 45 ” / 0 . 4 ” மிகப் பெரிய தபால் முத்திரையை வெளியிட்ட நாடு அமெரிக்கா அளவு 3 . 75 ” 2 ”

இன்றைய முத்திரை சேகரிப்பவரின் முன்னணியில் நிற்பவர் இங்கிலாந்தின் அரசி எலிசபெத் ஆவார் இப்பொழுதுபோக்கால் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மை — வளர்ந்தோங்கும் முயற்சி — நிலையான நினைவாற்றல் — தரமான நண்பர்கள் ஆகிய நலன்களைப் பெற்று உயர்தரமான வாழ்வு வாழ முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Sermon preached by Rev. S. Jeyanesan – Presbyter, C. S. I. Church Colombo at the funeral service of the late A. C. Canagarajah

We are gathered here today to give thanks to God for the life of Mr. A. C. Canagarajah and to affirm the Christian conviction that, while death is the ultimate end of human life, it marks a new beginning in our relationship with God.

We are also here to share our sorrow with his family and relations and to offer them our love and support.

Let me read a verse from the Scripture :

Hebrews 13 : 7 "Remember your leaders, those who spoke to you the word of God; consider the outcome of their life, and imitate their faith"

Sometimes it is very difficult to speak about people after their death When the family asksd me to say a few words about Mr. Canagarajah, I gladly accepted because without any effort we can say many things about him.

I have knewn Mr. Canagarajah for the last 25 years. We had become very close, especially since I married his niece. From 1977 onwards I had the pleasure of knowing him closely

**He was a very good father**

Mr. Canagarajah's family was a small one. He had only two boys, but in reality his family was a large one, comprehensive in its reach. He lived for others and always took pleasure in serving others. His family included his brothers and sisters, nephews, nieces, cousins, second cousins and third cousins There was no limit to his f mily.

His family respected him and looked up to him, even though he was the youngest in his family He was a mentor and a real model for all his family members

**He was a good model Christian**

I met him first at the Christa Seva Ashram. He was a friend of the Ashram. He supported the work in the Ashram a great deal.

Mr Canagarajah belonged to the unique group of individuals who transcended all denominational barriers, even as an ardent member of the Anglican Church. He was holding important positions of trust and responsibility in the Jaffna Diocese of the Church of South India. To him what was important was Christian work at its best wherever they were.

As a Technical Expert in his branch of knowledg Engineering he never displayed or desired to impose his will on others. He presented his facts with honesty and integrity and let others to decide for themselves. This was the spirit in which he participated in our various Councils and Boards.

**He was a good Social Worker**

The most important thing about him was his stabilising influence wherever he went and whatever job he participated in.

To my knowledge :-

1. He was a member of the Colombo Diocesan Council for many years.
2. He was Chairman of the Council of Jaffna College Institute of Technology.
3. Vice -- Chairman and Chairman of the Jaffna College Board of Directors.
4. Manager of St. John's College
5. Manager of the Nuffield School for the Deaf & Elind
6. Member of Karuna Nilayam Board
7. Member of Navajeevanam Board
8. Chairman of Jaffna Christian Union
9. Member of Women's Centre Board
10. Member of the Ashram Board
11. Member - J. D., C. S. I. — Diocesan Council

He held high positions in most of the Christian Institutions in the North.

I am also urged on this sad occasion to say a few words about Dr. (Mrs.) Joy Canagarajah. She belongs to a family which had played a distinguished role in many spheres of missionary enterprise in he Island and it is in this spirit of service that the spared with her husband in her life and work. .

You all know the role she plays in the medical field in McLeod Hospital. Inuvil, at this time of grief.

Today, Mr Canagarajah is no more but the 'Halls' in many of our Mission Institutions and the 'Wall' in many of our homes remind us of his architectural skill.

It was said of a famous Architect that the verse carved in his memorial. "If you want a monument for him, look around"

I like to say the same thing about A. C. If you want a monument for him, look around the Christian Institutionsin the North.

But most important was the life he led among us, the life of simplicity, honesty and integrity and devotion to the work to which 'His Master' had called him.

His multi — faceted service among our midst shall always remain a monument much bigger than any architectural structure.

I need hardly say how much he meant to the famliy members, to the Church and to the society. Mr. Canagarajah was a great man and because of his simplicity many who did not know him, couldn't but appreciate his greatness. But to a host of others, he had left his stamp in their minds as monuments, which will last forever.

As Hebrews say :-

"We must remember him and we must consider the outcome of his life"

The Good Lord has taken him away to be with him, away from the trials and tribulaiion of this earthly life. We thank God for Mr. Canagarajah's exemplary Christian life, well lived to His Glory and for the Welfare of all around him.

Death for a believer, as Jesus said,

"I am the resurrection and the life, those who believe in me, though they die, yet shall they live and whoever lives and believes in me shall never die"

---

Contiuned from Page 1

and had served in the Diocese for more than forty years He was ordained a Deacon in J. D., C. S. I. by Bishop Kulandran in 1961. He served in many of the Churches of the Diocese and was for some years the Evangelistic Officer of the Diocese. He retired from service in 1981.

The funeral service was conducted at his son's residence on Sunday the 17th November at 2.00 p. m. Bishop Ambalavanar conducted the service while the Rev. D. S. Thiagarajah and the Rev. Dr. S. Jebanesan paid tributes and preached the sermon The Rev. S. P. Nesakumar and Mr. T. Jeyachandran also took part. At the grave side in Jaffna where he was laid to rest besides his wife who predeceased him, The service was conducted by the Rev. K. P. Govindaraj and Bishop Ambalavanar did the committal.

The Rev. Kathiravelu leaves behind his daughter Ranee and son - in - law Mr. R. J. Gunaratnam, Proprietor of Ceyma Silks Limited and a son Mr. K. Nimalaranjan and Mrs. Nimalaranjan and a number of grandchildren and great grandchildren to bemoan his loss.

## St. Patrick's College Prize Giving

The Annual Prize Giving of St. Patrick's College, Jaffna was held on Friday the 18th of October at 9.30 a. m. at the Open Air Theatre of the College. The Chief Guest at the Prize Giving was the Rt. Rev. D. J. Ambalavanar, Bishop of the Jaffna Diocese of the C. S. I. This was perhaps the first occasion a Non Roman Catholic Bishop has been the Guest at the Prize Giving of this leading Roman Catholic College in Jaffna. The Most Rev. Dr. B. Deogupillai, Bishop of the Roman Catholic Diocese of Jaffna presided over the function and led it with prayer. The Rector, the Rev. Fr. Francis Joseph read the Annual College Report, which was a very creditable record despite the whole period being one of turmoils and tensions. Bishop Ambalavanar also in the absence of his wife, distributed the prizes.

In his address, Bishop Ambalavanar first greeted Bishop Deogupillai who was soon to retire on reaching his 75th year. He wished him "Ad Multos Annos. Ad Majorem Dei Gloriava". The Bishop recollected his school days fifty years ago when they from other schools envied St. Patricks's excellent sports performance. He recalled how students from all schools went for the All Jaffna Sports not only to cheer their own teams, but also to watch J. B. Kibukka of St. Patricks's perform the 110 Yards and 220 Yards Hurdles in such excellent speed and style. The Bishop went on to say that St. Patrick's had connections with Ireland whose great Apostle St. Patrick was also the Patron Saint of this College. Ireland is referred to as the Emerald Isle even as Sri Lanka is referred to as The Pearl of the Indian Ocean. Unfortunately, despite the centuries of religious teaching and education, both these Islands are now wrecked by communal strife of violence and tensions. The challenge to us as educationists and religious leaders, is to see how this unfortunate predicament can be changed. It is said of an ancient Greek that as he was crossing the border of one country into another, someone similar to a modern Immigration Officer at a check point asked him "what is your nationality". The reply of the Greek was "I am a citizen of the Universe". He gave that answer even before he knew that the earth was a sphere. Education, he went on should help all of us to transcend our smaller loyalties to become loyal to the citizens hip of the Universe. If that is the reality for which we work, then we have to change our thinking to fit the reality. This in short is the challenge given to educationists of our day.

In a brief entertainment that was part of the function, the lady staff members of the College performed a beautiful Folk Dance.

Mas. G. Joseph Jude, the Head Prefect proposed the vote of thanks, seconded by Mr. A. C. Sebanayagam, a Retired Government Agent and an alumnus of the College.

Registered as a News Paper at the P. O. Sri Lanka under No. Q/J/140/89 News Printed for the Jaffna Diocese of the Church of South India at The American Ceylon Mission Press, 182. 1st Cross Street. Jaffna on Friday the 8th of August 1991 and published by The Rev. G. D. ANANDARAJAN 182 First Cross Street Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org